മംഗളോദയം

V 11 No/10 Oct 1929.

JL
ണ211, M19BA
M29.11.10.

210779

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

17 JUN 1930

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை


| தொகுதி 11 | 1929ஞ அக்டோபர் மாதம் | பகுதி 10 |
|---|---|---|


### தெய்வ வணக்கம்

மேருப்பொருப்பை யொரு தண்டெனக் கொண்டெழு
    வேலையை யுறிஞ்சி விட்டும்
விரிசக்ர வாளகிரி ஒருவாகு புரியாக
    வெவ்வலித் தோளிலிட்டும்
பேருற்ற கய மெட்டு மெட்டு நாகங்கொடு
    பிணித்துச் செவிக் கணிந்தும்
பெரிய புவனப் பொறைக் கமடமதெடுத்துப்
    பிறங்குசில் லென விடுத்தும்
சீருற்று விளையாடு பூதக்கணத்தொடுஞ்
    சென்று சூர் வேட்டையாடும்
சேவகப் பெருமாளென் ஆவியுட்பெருமாள்
    செயத்தேவர் முனிவர் பெருமாள்
மாரிப்புயற் கருணை பொழிகின்ற போரூர
    மாயூரகுக வருகவே
மலிபுவன முழுவதுங் கிடுகிடென கொடியில்வலம்
    வருகந்த வேள் வருகவே.

(போரூர்.சந்நிதி முறை)

210779

# ஹிதோபதேசம்

எப்போதும் நல்லவர்களுடைய சகவாசத்தையே நாடவேண்டும். நல்லவர்களுடைய கூட்டத்திலேயே இருக்கவேண்டும். நல்லவர்களுடன் உபதேசத்திலேயே கவனமாயிருக்க வேண்டும். ஆரம்பத்தில் எந்த சகவாசம் பிடிபடுகிறதோ அந்த ஆயுளுள்ளளவும் தொடரும். ஆகையினால் இளமையிலிருந்தே நல்லவர்களின் நட்பை நாடி அடைந்து அவர்களுடைய நடவடிக்கைகளைப் பின்பற்றிப் பழகவேண்டும்.

“பன்றியோடுகூடிய கன்றும் நரகந்தின்னும்” என்று பழமொழி யுண்டாகையினால், கெட்ட சகவாசம் நல்ல குலத்திற் பிறந்த நல்ல விவேகமுடையவனையும் கெடுத்துவிடும்.

“ஒருவனுடைய நடவடிக்கை யறிய வேண்டுமானால், அவனுடைய நண்பர்கள் யாரென்று கவனி”— என்று சொல்வதுண்டு. ஆகையினால் நல்லவர்களுடைய நட்பின் பெருமையைப் பெறுவது அவசியமென்பதைக் கூறவும் வேண்டுமா ?

சுகமும் துக்கமும் மாறி மாறி வருமென்பது திண்ணம். ஆகையினால் பணக்காரன் ஏழையை இகழ்வதும் சௌகரியத்தி லிருப்பவன் அசௌகரியத்தில் அல்லற்படுகிறவனை இகழ்வதும் பேதைமையாகும்.

ஒரு சிறுவியாபாரி சுமையெடுக்க ஒரு குதிரையையும் ஓர் ஆட்டையும் வளர்த்துவந்தான். குதிரை



சுமை சுமந்துபோய் வந்ததும், வியாபாரி, அதன் இரண்டு முன்கால்களையும் அணைந்து ஒரு மைதானத்தில் மேயும்படி விட்டுவிடுவது வழக்கம். ஆனால் ஆட்டுக்கோ அவன் தினந்தோறும் தழையும் புல்லும் ஏராளமாய்ப் போட்டு மிகச்செல்வமாய் வளர்த்து வருவான். அதனால் ஆடு கொழுத்து குதிரைக் குட்டியைப்போ லிருந்தது. அது ஒருநாள் குதிரையைப் பார்த்து, “நீ நமது எஜமானனுக்குச் சுமையெடுக்கிறாய்! நன்றாய் உழைக்கிறாய்! அவர் உனக்குத் தீனிபோடுகிறது மில்லை. தீனி போடாவிட்டால் கிடக்கிறது. நீ கிட்டவந்தால் உன்னை அவர் திட்டி விரட்டுகிறார். ஆனால் என்னை அவர் உடம்பெல்லாம் தடவிக்கொடுக்கிறார். எனக்குப் புல்லும் தழையும் ஏராளமாய்ப் போடுகிறார். என்னைப் பார். நான் குதிரைக் குட்டியைப் போலிருக்கிறேன். என்னை விடப் புண்யசாலி யுண்டோ உலகில்!” என்று டம்பம் பேசிக்கொண்டது.

குதிரை “நண்ப, நீ சொல்வது சரிதான். நான் பாவஞ்செய்தவ னென்பதில் ஐயமில்லை. ஆயினும் சுகமும் துக்கமும் எப்போதும் ஓரிடத்தில் நிலைத்திருப்பதில்லை. அதைக் கவனி. உன் சுகம் நிலைக்காது. அதை ஒருநாள் காட்டுகிறேன்” என்றது.

பின்பொரு நாள் பிடாரி கோயில் திருநாள் வந்தது. அன்று அவ்வியாபாரி அவ்வாட்டைக் காளி கோயிலுக்குப் பலியிடக் கொண்டு போனான். ஆடு அழுதுகொண்டே போயிற்று. அதைகண்டக் குதிரை,

"ஏ ஆடே! ஏன் அழுகிறாய்? உன்னுடைய கஷ்டம் இன்று தெரிகிறதுபோலும்! நான் அன்றே சொன்னேன் சுகமும் துக்கமும் ஓரிடத்தில் தங்கிரா வென்று. உனக்கு அது சிரிப்பாயிருந்தது. என்னைப் பரிகாசஞ் செய்தாய். அவை யெல்லாம் இன்று துக்கமாக மாறியது. உன்னை இந்நிலையிலே காணும் என்னுடைய துக்க மெல்லாம் மாறிச் சந்தோஷ முண்டாயிற்று. போ! போ! அநுபவி! நீ புண்யாத்துமா தான்! நான் பாபாத்மா தான்" என்றது.

ஆடு வாய் திறவாமல் மனதிற்குள் சுகமும் துக்கமும் மாறுமென்பது இன்று தெரிகிறது. இன்று தெரிந்தென்ன செய்கிறது. இதோ பலிக்களத்திற்குப் போகிறேன். அப்பால் எஜமானனுடைய வயிற்றுக்குள் போய் அவனுக்குக் கொழுப்பை உண்டாக்கப் போகிறேன்" என்றெண்ணிக்கொண்டு போய்விட்டது.

உலகத்தில உதவி மூவகையாகப் பிரிந்திருக்கிறது. 1. செய்யாமற் செய்த உதவி. 2. காலத்தினால் செய்த உதவி. 3 பயன் கருதாது செய்த உதவி.

1. செய்யாமற் செய்த உதவியாவது :—
ஒருவன் தனக்கு ஓர் உதவியும் செய்யாதிருக்கையில் அவனுக்கு உதவி செய்தல்.

2. காலத்தினால் செய்த உதவியாவது:—
ஒருவனுக்கு உதவி வேண்டியிருக்கும் சமயமறிந்து உதவிசெய்தல்.

3. பயன் கருதாமல் செய்த உதவியாவது:—
இன்ன உதவி செய்தால் இன்ன பயன் கிடைக்கும் என்பதை எண்ணாமலே உதவி புரிவது.



இம்மூன்று உதவிகளே முக்கியமானவை. இருப்பினும் இன்னும் பலவிதமான உதவிகளுண்டு. அவைகளையெல்லாம் அறிந்து உதவி செய்வதென்றால் நம்மாலாகாது. ஆகாதாயினும், ஒருவன் செய்த உதவிக்கு மறு உதவி செய்யாமலிருப்பினும், அவன் செய்த உதவியை மறப்பதும் மகா பாதகமாகும். அதனாலே தான் ஔவையார் "நன்றி மறவேல்" என்று கட்டளை யிட்டார். நாயனாரும்—

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

என்று போதித்தார்.

---

## உலைவாயை மூடலாம் ஊர்வாயை மூடலாமா?

ஓர் ஊரில் ஒரு பெரியவர் தம்மை வந்தடுத்தவர்கட்கெல்லாம் நல்ல நடவடிக்கைகளைக் கற்பித்து அவர்களை நல்ல வழிக்குக் கொண்டுவருவதில் ஊக்கமுடையவரா யிருந்தார். அவர் வயதிற் பெரியவரா யிருந்ததுமன்றி அறிவிலும் கல்வியிலும் பெரியவரா யிருந்தார். ஆகையினால் அவரை அவ்வூரில் எல்லோரும் கண்ணியப்படுத்தி வந்தனர்.

ஒரு நாள் அப்பெரியாரிடம் ஏழுமலை என்பவனொருவன் இரண்டு கிளிப்பிள்ளைகளை விலைக்கு விற்கக் கொண்டு வந்தான். பெரியவர் அவனைக் கண்டதும் "ஆகா! என்ன அநியாயம்! காட்டில் யதேச்சையாய்த் திரியும் பறவைகளைப் பிடித்து விற்பதையும்

தங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்குரிய தொழிலாக வைத்துக் கொண்டிருக்கிறார்களே! என்ன கொடுமை யிது!" என்றெண்ணி, அவனை அருகிலழைத்து, அக் கிளிகளை விலைக்கு வாங்கினார்.

ஏழுமலை சிறுவயதா யிருக்கும்போது அப்பெரியார் ஓர் ஊரில் ஒரு திண்ணைப் பள்ளிக்கூட உபாத்தியாயரா யிருந்தார். ஏழுமலை தன் சிறுவயதில் அவரிடம் கல்வி கற்றுக்கொண்டானாதலால் அவன் பெரியவரைத் தனக்கு உபாத்தியாயரா யிருந்தவரென்று கண்டு கொண்டான். உடனே "ஐயா! வந்தனம்; நான் யார் தெரியுமா?- தங்களிடம படித்த ஏழுமலை " என்றான். பெரியவர்க்கு அதைக் கேட்டதும் "ஆகா, நம்மிடம் படித்த சிஷ்யனுக்கு இப்படிப்பட்ட புத்தி யேற்பட்டிருக்கிறதா! நன்று! நன்று!" என்று கருதி,'அப்பா ஏழுமலை, இப்போது உன்னைப்பற்றி நினைவு வருகிறது. நீ யேன் இவ்வாறான கொடுமை செய்யத் தலைப்பட்டாய்? பறவைகளைப் பிடித்து விற்று வயிறு வளர்ப்பது பாபம் என்று உனக்குத் தெரியவில்லையா?' - என்று கேட்டார்.

ஏழுமலை, 'ஐயா! இது பாபம் என்பதும் கொடுமை என்பதும் நன்கு புலப்படுகின்றன. இருந்தாலும் நான் என் வயிறு வளர்க்க இது வரையில் செய்த கொடுமைகளை நினைத்தால் அவ்வளவு கொடுமையானதென்று நினைக்க இடமில்லாம லிருக்கிறது. என்னவென்று கூறுவேன் அவற்றை! ஒரு சமயம், பிறர் பொருளைக் களவாடியது மல்லாமல் கொலையும் புரிந்திருக்கிறேன்.



அவற்றை யெல்லாம் கூறுவதில் யாது பயன்? என் விதி இவ்வாறு முடிந்தது" என்று கண் கலங்கினான்.

பெரியவர் அவனிடம் இரக்கமுற்று அவனை நல்ல வழிக்குக் கொண்டுவரத் திருவுளங் கொண்டார். "ஏழுமலை! நீ உன்னூருக்குப் போய் இன்னும் இரண்டு மாதங் கழித்து வா. நான் ஒரு நல்லவழியில் உனக்குப் பிழைப்புக் காட்டுகிறேன்" என்று கூறி அனுப்பிவிட்டு ஒரு கிளியை ஓர் உபாத்தியாயரிடமும் மற்றொரு கிளியை ஒரு கசாப்புக் கடைக்காரனிடமும் கொடுத்து வளர்க்கச் சொன்னார்.

அப்பால் இரண்டு மாதத்திற் கெல்லாம் ஏழுமலை வந்து பெரியவரைக் கண்டு வணங்கினான். பெரியவர் ஏழுமலையை அன்போடு வரவேற்றுச் சுகம் விசாரித்த பின் தம்மிடமிருந்த ஒருவரைக் கூப்பிட்டு அவனுக்கு அவன் தமக்கு இரண்டு மாதங்கட்கு முன் விற்ற கிளிகளிரண்டையும் காட்டி அழைத்து வரும்படி கட்டளை யிட்டார். அவர் அவ்வாறே ஏழுமலைக்கு கிளிகளிரண்டையும் காட்டி அழைத்து வந்தார்.

பெரியவர்- 'அப்பா, ஏழுமலை நீ விற்ற கிளிகள் எவ்வாறிருக்கின்றன ?'

ஏழுமலை - 'கசாப்புக் கடைக்காரனிட மிருக்கும் கிளி-வெட்டு, குத்து - துண்டு செய் என்று பேசுகின்றது; ஆனால் நன்றாய் வளர்ந்திருக்கிறது. பள்ளிக்கூட உபாத்தியாயரிட மிருக்கும் கிளி 'அறஞ்செய விரும்பு, 'ஊக்கமது கைவிடேல்' என்றும், பாடம்படி - எழுது என்றும் பேசுகின்றது.'

பெரியவர்-'கிளிகள் அவ்வாறு வேறுபட்டுப் பேசுவதேன் ?"

ஏழுமலை - "அவை அந்த அந்த இடத்துக்கும் பழக்கத்துக்கும் தக்கபடி பேசுகின்றன."

பெரியவர்-'ஆகையினால் ஒருவனுக்கு நல்ல பழக்கமிருந்தால் நல்ல பேச்சும், நல்ல நடவடிக்கையும் பிடிபடுமென்றும், தீயவர் பழக்கமிருந்தால் கெட்ட பேச்சுங் கெட்ட செய்கையும் பிடிபடுமென்றும் தெரிந்துகொண்டோம். இதனால் உன்னுடைய செய்கையை நோக்கும் நமக்கு நீ தீயவருடைய பழக்கமுடையவனாயிருக்கிறாயென்று தெரிகிறது. இன்று முதல் நீ தீயவருடைய பழக்கத்தை விட்டு விடு நல்லவருடைய பழக்கத்தை நாடி நட. நல்லவர்கள் உன்னை இத் தொழிலில் கணமும் வைக்க மாட்டார்கள். அவர்கள் தங்களைப் போலவே உன்னையும் ஒரு நல்ல தொழிலில் அமர்த்துவார்கள்; அல்லது நல்ல வழியைக் காட்டிக் கொடுப்பார்கள். இதனை உதாரண வாயிலாக உணர்த்தவே உன் கிளிகளை விலைக்கு வாங்கி வளர்க்கச் செய்து உன்னை இரண்டுமாதங் கழித்து வரச் சொன்னேன். போய் வா. நல்லவனென்று பேரெடு. பாபியென்ற நாமம் படையாதே" என்று புத்திமதி கூறி அனுப்பினார்.

ஏழுமலை அன்று முதல் பறவைகளைப் பிடித்து விற்கும் தொழிலை விட்டுவிட்டு நல்லவர்கள் கூட்டத்திற் கூடி பாபமற்ற நல்ல தொழிலைச் செய்து ஜீவனம் செய்து வந்தான். அவ்வாறு ஏழுமலை திரும்பவும்



அவனை அவன் ஊரார் நல்லவனென்று மதிக்கவில்லை. அது ஏழுமலையை மிகவும் பாதித்தது. அதனால் அவன் பெரியவரிடம் போய், "நான் நல்லவர் இணக்கங் கொண்டு பாபமற்ற தொழிலாகிய பயிர்த் தொழில் புரிந்து வருகிறேன். என்னூரார் இன்னும் என்னை நல்லவனாக மதிக்கவில்லை. அது என்னை மிகவும் பாதிக்கிறது" என்றான்.

பெரியவர் "அப்பா, விசேஷங் கேள். நாம் உலகத்தில் எந்த விதமான தீயசெய்கைகளைச் செய்தாலும், "ஆண்டவனே! என் அறியாமையினாலும் தீயவர் கூட்டுறவினாலும் கொடிய செய்கைகள் பல செய்து விட்டேன். அவ்வாறு செய்தது தவறென இப்பொழுது என்னெஞ்ச முணர்ந்து வருந்துகிறது. இனி அவ்வாறான தீயசெய்கைகளில் ஒருபோதும் தலையிடமாட்டேன். என்னை மன்னித்தல் வேண்டும்" என்று கடவுளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவருடைய மன்னிப்பையும் பெறலாம். ஆனால் உலகத்தில் ஜனங்களுக் கிடையில் பரவிய வசைமொழியை மறைப்பதற்காகாது. அதனாலே தான் "உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடுவதற்காகுமா?" என்ற பழமொழி வழங்குகிறது. ஆனால் ஒன்று செய். நீ உன் மனச்சாட்சியின்படி எல்லோருக்கும் நல்லவனாக நடக்கிறாயல்லவா?- அந்த நிலையில் திருப்திகொள். ஆனால் உன்னை இகழும் அவர்கள் நாணமடையும்படி நல்ல செய்கைகளை அடிக்கடி செய்துவா. இது தான் அவ்வசையை மாற்றுவதற் குரிய வழி" என்று போதனை செய்தனுப்பினார்.

# 10 அரசனும் குடிகளும்

உலகத்திலே அநேக நாடுகளிருக்கின்றன. நாடுகளைக் காப்பவனே அரசன். அதனாலே தான் அரசனுக்குக் காவலன், பூபாலன், பூபதி, நரபதி என்றும் பெயர்களிருக்கின்றன.

ஒரு நாட்டரசன் இன்னொரு நாட்டரசனோடு போர்புரிந்து வெற்றி பெற்றால், வெற்றிபெற்ற வேந்தன் தோல்வியுற்ற மன்னனிடம் கப்பம் வாங்குவது வழக்கம். அவன் அவனுடைய பொக்கிஷத்தையும் வாரிக்கொண்டு போவான். குடிகளைத் தனக் கடிமைகளாக்கித் தன் நாட்டுக்குப் பிடித்துக்கொண்டு போவதுமுண்டு. இவ்வாறு நேராமல் தன் நாட்டைக் காப்பதே காவலனுடைய கடமையாம்.

ஒரு நாட்டிலேயே குடிகளுக்குள் பலவான் பலமில்லாதவனை அடித்து அவனுடைய பொருளைக் கைக்கொள்வான். அவ்வாறு நேராமல் தன் குடிகளைப் பாதுகாப்பதும் பார்த்திபனுடைய கடமையாம்.

இன்னொரு நாட்டிறைவன் தன் நாட்டின்மீது படையெடுத்து வராமல் காப்பதற்காக அரசன் படைவீரர்களை வைத்துக்கொள்கிறான். தன் நாட்டுக் குடிகளுக்குள் கலகம் வராமற் காப்பதற்காக அரசன் போலீஸார்களை நியமித்துக் கொள்கிறான். நியாயத்தையும் அநியாயத்தையுங் கண்டுபிடித்துத் தீர்ப்பு சொல்ல நீதிபதிகளையும் நியாயஸ்தலங்களையும் அரசன்



ஏற்படுத்துகிறான். நீதிபதிகள் அநியாயஞ் செய்பவர்களைத் தண்டித்து அடக்குவார்கள்.

படைவீரர்களாலும் போலீஸார்களாலும் நீதிபதிகளாலும் வேந்தன் தன்நாட்டைக் காப்பாற்றுகிறான்; தன்னையும் காத்துக் கொள்கிறான். படை வீரர்களையும் போலீஸார்களையும் நீதிபதிகளையும் வைத்துக் கொள்ளக் கொற்றவனுக்குப் பொருள் வேண்டுமல்லவா? அதற்காகவே அரசன் குடிகளிடமிருந்து வரி வசூல் செய்கிறான்.

இவற்றைத் தவிர அரசன் தன் நாட்டுக் குடிகளுடைய சரீர சௌக்யத்தையும் கவனிக்கக் கடமைப்பட்டவனாகிறான். குடிகள் நல்ல நிலைமையிலிருந்தால் தானே அரசனுக்கும் சுகமுண்டாம்?-அவர்கள் கஷ்ட நிலையிலிருப்பார்களானால் அரசன் யாரை ஆளுவது? குடிகளின் சௌகரியத்திற்காகவே அரசன் தருமவைத்தியசாலைகளைக் கட்டி வைக்கிறான். விஸ்தாரமான சாலைகளைப் போட்டுவைக்கிறான். வயல்களுக்கு வேண்டிய நீர்ப்பாசன வசதிகளைச் செய்து வைக்கிறான். குடிகிணறுகளை வெட்டி, சத்திரம், சாவடிகளையும் சதுக்கங்களையும் கட்டி வைக்கிறான். ஏதாவது கொள்ளை நோயினால் கஷ்டப் படுவார்களானால் அச்சமயம் தக்க சௌகரியங்களைச் செய்து கொடுத்து குடிகளைப் காப்பாற்றுகிறான். இவற்றிற்காகவும் அரசனுக்குப் பொருள் வேண்டுமல்லவா?- ஆகையால் குடிகள் அரசனுக்கு வரி கொடுப்பதோடு சமயம் வந்தபோது உடல், பொருள், ஆவியையும் உதவக் காத்துக் கொண்டிருத்தல் வேண்டும்.

வேந்தன் குடிகளுடைய நன்மையை நாடுகிறவனாகிறபடியால் குடிகள் அவனிடம் தெய்வ விசுவாசம் பாராட்ட வேண்டும். 'அனைவர்க்கும் தெய்வம் இலை முகப்பைம்பூண் இறை' என்று பெரியார் கூறியிருக்கிறார்களல்லவா? அரசன் செய்யும் சட்ட திட்டங்களுக்கு அடங்கி நடத்தல் வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் அரசனுக்குத் துரோகம் நினைப்பது கூடாது. அரசனும் குடிகள் மனவருத்தமடையும் படியான வழியிலே அவர்களிடம் வரி வசூல் செய்வது கூடாது. அரசன் இராஜாங்கத்தில் எந்த ஒரு செய்கையை அமுலுக்குக் கொண்டுவர எண்ணினாலும் மதி மந்திரிகளுடனிருந்து தீர ஆலோசனை செய்தல் வேண்டும்.

“அரசனெவ்வழி குடிகள் அவ்வழி” என்ற பழமொழியுண்டு. ஆகையினால் அரசன் நீதியைத் தனக்கு அரசனாகக் கொண்டு அது காட்டும் வழியில் செங்கோல் செலுத்தக் கடமைப் பட்டவனாகிறான். இதற்கு மாறுபட்டு நடப்பானேயானால் குடிகள் அவன் தேசத்தில் வாழ விரும்பமாட்டார்கள். அவனுடைய ஆளுகையும் கொடுங்கோலாளுகையாய் விடும். “கொடுங்கோல் அரசன் வாழும் நாட்டில் கடும்புலி வாழும் காடு நன்றே' என்னும் முதுமொழியும் உண்டல்லவா? ஆகவே அரசன் தான் நல்ல நிலைமையில் இருக்க வேண்டுமானால் குடிகளை நல்ல நிலைமையில் வைத்தாள வேண்டும். பிரஜைகளை அவன் தன்னுயிர் போல பாவித்துத் தான் சரீரம் போல் நின்று ஆத



ரிக்க வேண்டும். அப்போது குடிகளும் அவனைத் தங்களுயிர் போலெண்ணித் தாங்கள் உடல் போலிருந்து ஆதரித்து வருவார்கள். “ஆற்றங்கரை வாழ் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமதன்றே” என்னும் பேச்சுக்கு இடந்தராதவனே அரச பதவிக்குரியவனாவான். தப்பிதஞ் செய்தவரை அதற்கேற்றவாறு தண்டிக்க வேண்டுவது வேந்தனுக்குரிய முறைமை. அதை அவன் பராமுகஞ் செய்வது கூடாது. “சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே” என்றும் “சிறியோர் பெரும்பிழை செய்தனராயிற் பெரியோர் அப்பிழை பொறுத்தலுமரிதே” என்றும் கூறப்பட்டிருக்கிறதே. பிழை கண்டு தண்டித்தல் பயிருக்கேற்படும் களை களைவது போலாம்.

“ முறை செய்து காப்பாற்றும் மன்னவன்
மக்கட் கிறையென்று வைக்கப்படும்”.

(குறள்)

# பவளம்

பவளம் இன்னதென்பது நம்முடைய தேசத்தில் சிறுவர் சிறுமியர்க்குங் கூடத் தெரியும். ஆயினும் அதன் குணத்தைப் பற்றியும் உற்பத்தியைப் பற்றியும் செவ்வையாய்த் தெரிந்து கொண்டவர் சிறுபான்மையரே யாவர். தெரியாதவர்கள் பவளம் ஒரு கொடி யென்றும் அதனருகே ஜனங்கள் போனால் சீறிப் பாயுமென்றும், அதை எடுப்பவர்கள் தூரத்திலிருந்தே நறுக்கி யெடுத்தல் வேண்டுமென்றும் சொல்வதுண்டு. ஐரோப்பியரும் சுமார் நூறு வருடங்களுக்கு முன்னே, பவளத்தைப் பற்றிச் செவ்வையாய்த் தெரிந்துகொள்ளாம லிருந்தனர். அவர்கள் பவளம் கடலினுள்ளே முளைக்கும் ஒரு சிறு செடியிலிருந்து நறுக்கி எடுப்பதாகக் கருதி யிருந்தனர்.

பவளம் ஒரு விதமான கடற்பிராணியினிடம் உற்பத்தியாகின்றது. இந்தப் பிராணிகள் கடலில் அதிகக் குளிர்ச்சியில்லாத இடத்தில் அறுபது அடிக்குக் கீழே இருக்கின்றன. ஆகவே அந்தப் பிராணியைப் பவளப்பூச்சி யென்று சொல்வதுண்டு. இந்தப் பூச்சிகள் சேறும் மண்ணும் இல்லாததாய்க் கற்பாறையுள்ள இடத்திலேயே வசிக்கும். இப்பூச்சிகள் நாடோறும் ஏராளமாய் விர்த்தியாய்க் கொண்டே வரும்.



இந்தப் பூச்சிகளின் உடலிலிருந்து ஒரு விதமான டின வஸ்துக்கள் உண்டாகின்றன. அவ்வஸ்துக்களே பவளப் பாறைகளாகின்றன. அப்பாறைகளில் மரக்கிளைகள்போல் பவளத்தண்டுகள் விளையும். அவைகளின் மேல் வெண்மையான தோல் போன்ற ஒருவஸ்து மூடியிருக்கும். அது வழுவழுப்பாயும் பளபளப்பாயு மிருக்கும். இக்கிளைகளின் மேற்பாகத்தில் முட்டைகளைப் போன்றவை எண்ணிறந்தன பூத்திருக்கும். அம்முட்டைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பவளப் பூச்சி யிருக்கும். அவ்வழகிய சிறு ஜந்துக்களைப் பவளப் புஷ்பமென்று பலர் எண்ணி வந்தனர்.

பவளத்தின் விலை நிறத்தையும் பரிமாணத்தையும் பொறுத்தாயிருக்கிறது. பவளம் சுத்த வெண்மையாயுமிருக்கும். கொவ்வைக்கனி போன்ற சிவப்பு வரையில் சிவந்துமிருக்கும். ரோஜாமலரைப் போன்ற நிறமுடைய பவளமே விலை மதிப்புடையது.

ஒரே அளவுள்ள இரண்டு இரும்புத் துண்டுகளை குறுக்கிலும் உயரத்திலும் சிலுவையைப்போல் அமைத்து அவற்றின் நுனிகளில் வலைகளைக் கட்டிப் பவளப் பாறைகளை இயந்திரத்தினா லிடித்துத் தள்ளி அத்துண்டுகளை வலையில் வாரி யெடுப்பார்கள். முத்துக்களை எடுப்பதுபோல் கடலில் முழுகி எடுப்பது முண்டு.

ஆயிரக்கணக்கான வருஷங்களாகப் பவளம் அணிகலனாக உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. ஒரு காலத்தில் ரோமன் ஜாதியார் பவளங்களைக் குழந்தைகளின் கழுத்தில் இரட்சையாகக் கட்டிவந்தனர். இக்காலத்திலும் இட்டாலி தேசவாசிகள் திருஷ்டி தோஷம் ஏற்படாதிருப்பதற்காகப் பவளத்தைக் கட்டிக் கொள்கிறார்கள். நம்முடைய தேசத்திலும் பலர், பவளமாலை பூண்பது உடம்பிற்கு நல்லதென்று கருதி அணிந்து வருகிறார்கள். பெரும்பான்மையாக நமது தேச மாதர்களே அணிகின்றார்கள்.

வருஷந்தோறும் கோடிக்கணக்கான ரூபாவுக்கதிகமாகப் பவளம் வியாபாரமாய் வருகிறது. உயர்ந்த பவளத்தின் விலை ஒரு அவுன்ஸ் நிறையுடையது ரூபா ஆயிரமுதல் மூவாயிரம் வரையிலுண்டு. பவளத் துண்டை வைத்தியர்கள் பஸ்பம் செய்து வைத்துக் கொண்டு இருமல் முதலிய நோய்களுக்குக் கொடுக்கிறார்கள். பவளத்தில் முக்காற் பங்கிற்கு மேல் சுக்கானும் சிறிது அயமும் மாக்னீஸியா என்னும் ஒரு வஸ்துவும் சேர்ந்திருப்பதாக ரஸாயன சாஸ்திரிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

## ஜீவகாருண்யப் பனுவல்கள்

கலையெலா முணர்ந்தா னேனும் கரிசறத் தெளிந்தா னேனும்
மலையென உயர்ந்தா னேனும் மனமய லகன்றா னேனும்
உலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கைய னேனும்
இலகிய இரக்க மின்றேல் எழுநர கடைவ னன்றே.

நலிதரு சிறிய தெய்வமென் றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர வாடு பன்றிகுக் குடங்கள்
பலிக்கடா முதலிய வுயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவுங் கண்டே
புந்திநொந் துளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்
கண்டகா லத்திலும் பயந்தேன்.

—இராமலிங்க சுவாமிகள்.

## இராமலிங்க சுவாமிகள்

கொலைபுரிவார் தவிரமற்றை யெல்லாரு நினது
குலத்தாரே நீ யெனது குலத்துமுதன் மகனே
மலைவுறவே சுத்தசிவ சமரசசன் மார்க்கம்
வளரவளர்ந் திருக்கவென வாழ்த்தியவென் குருவே
நிலைவிழைவார் தமைகாக்கு நித்தியனே யெல்லா
நிலையும்விளங் குறவருளில் நிறுத்தியசிற் குணனே
புலையறியாப் பெருந்தவர்கள் போற்றமணிப் பொதுவில்
புனிதநடத் தரசேயென் புகலுமணிந் தருளே.

## வேறு.

மருவாணைப் பெண்ணாக்கி யொருகணத்திற் கண்விழித்து
வயங்கு மப்பெண்
ணுருவாணை யுருவாக்கி யிறந்தவரை யெழுப்புகின்ற
வுறுவ னேனுங்
கருவாணை யுறவிரங்கா துயிருடம்பைக் கடிந்துண்ணுங்
கருத்த னேலெங்
குருவாணை யெமதுசிவக் கொழுந்தாணை ஞானியெனக்
கூறொ ணாதே.

எவ்வுயிரும் பொதுவெனக்கண் டிரங்கியுப கரிக்கின்றார்
யாவ ரந்தச்
செவ்வியர்தஞ் செயலனைத்துந் திருவருளின் செயலெனவே
தெரிந்தே னிங்கே
கவ்வையிலாத் திருநெறியத் திருவாளர் தமக்கேவல்
களிப்பாற் செய்ய
ஒவ்வியதென் கருத்தவர்சீ ரோதிடவென் வாய்மிகவு
மூர்வ தாலோ.

எத்துணையும் பேதமுறா தெவ்வுயிருந் தம்முயிர்போ
லெண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடையவரா யுவக்கின்றார் யாவரவ
ருளந்தான் சுத்த
சித்துருவா யெம்பெருமா னடம்புரியு மிடமெனநான்
தெரிந்தே னந்த
வித்தகர்த மடிக்கேவல் புரிந்திடவென் சிந்தைமிக
விழைந்த தாலோ.



## வேறு.

தயையுடையா ரெல்லாருஞ் சமரசசன் மார்க்கம்
சார்ந்தவரே யிங்கவர்கள் தம்மோடுங் கூடி
நயமுறுநல் லருணெறியிற் களித்துவிளை யாடி
நண்ணுகவென் றெனக்கிசைத்த நண்புறுசற் குருவே
உயலுறுமென் னுயிர்க்கினிய வுறவேயென் னறிவி
லோங்கியபே ரன்பேயென் னன்பிலுறு மொளியே
மயலறுமெய்த் தவர்சூழ்ந்து போற்றுமணி மன்றில்
மாநடத்தென் னரசேயென் மாலையணிந் தருளே.

அருளுடையா ரெல்லாருஞ் சமரசசன் மார்க்க
மடைந்தவரே யாதலினா லவருடனே கூடித்
தெருளுடைய வருணெறியில் களித்துவிளை யாடிச்
செழித்திடுக வாழ்கவெனச் செப்பியசற் குருவே
பொருளுடைய பெருங்கருணைப் பூரணமெய்ச் சிவமே
போதாந்த முதலாறும் நிறைந்தொளிரு மொளியே
மருளுடையார் தமக்குமரு ணீக்கமணிப் பொதுவில்
வயங்குநடத் தரசேயென் மாலையுமேற் றருளே.

மண்ணுல கதிலே யுயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை யொருசிறி தெனினுங்
கண்ணுறப் பார்த்துஞ் செவியுறக் கேட்டும்
கணமும்நான் சகித்திட மாட்டேன்
எண்ணுறு மெனக்கே நின்னருள் வலத்தா
லிசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்
நண்ணுமவ் வருத்தந் தவிர்க்கநல் வரந்தா
னல்குத லெனக்கிச்சை யெந்தாய்.

வருமுயி ரிரக்கம் பற்றியே யுலக
வழக்கிலென் மனஞ்சென்ற தோறும்
வெருவநின் னடிக்கே விண்ணப்பித்]திருந்தேன்
விண்ணப்பஞ் செய்கின்றே னின்று
முருவவென் னுயிர்தா னுயிரிரக் கந்தா
னென்றதே யிரண்டிலை யிரக்கம்
ஒருவிலென் னுயிரு மொருவுமென் னுள்ளத்
தொருவனே நின்பதத் தாணை.

என்னையு மிரக்கந் தன்னையு மொன்றா
யிருக்கவே யிசைவித்திவ் வுலகில்
மன்னிவாழ் வுறவே வருவித்த கருணை
வள்ளல்நீ நினக்கிது விடயம்
பன்னலென் னடியே னயினும் பிள்ளைப்
பாங்கினு லுரைக்கின்றே னெந்தாய்
இன்னவா றெனநீ சொன்னவா றியற்று
திருந்ததோ ரிரையுமிங் கிலையே.

---

## தாயுமானார்.

எவ்வுயிருந் தன்னுயிர்போ லெண்ணுந் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ.
எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.
எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
தெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே.
தம்முயிர்போ லெவ்வுயிருந் தானென்று தண்ணருள்கூர்
செம்மையருக் கேவலென்று செய்வேன் பராபரமே.
எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங் கிருப்பதுநீ அன்றோ பராபரமே.

## சுத்தவீரன், அமைச்சன், கவிவாணன் ஆகிய இம்மூவரில் தன் நாட்டுக்குப் பெரும் பயனை விளைப்பவன் எவன்?

---

பத்மாபுரி என்னும் பட்டணத்தில் அரசுபுரிந்து வந்த ஜயதுங்கன் என்னும் வேந்தனுக்கு மங்கையர்க்கரசி என்னும் இல்லறத்துணைவி இருந்தனள். அவ்விருவர் தவப்பேறாக மீனாக்ஷி, காமாக்ஷி, விசாலாக்ஷி என்னும் பெயருடைய மூன்று பெண்கள் பிறந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, சகல கலைகளிலும் கல்வி பயின்று, நுட்ப புத்தி அமையப் பெற்றிருந்தார்கள். ஒரு நாள் மங்கையர்க்கரசியாகிய தாயும் மூன்று வனிதாரத்தினங்களாகிய புத்திரிகளும் அநேக தாதியர் சேடியர் முதலியோர் தம்மைப் புடைசூழ்ந்து உபசாரம் செய்துவர, அவ்வூருக்கு அருகேயிருந்த ஓர் உத்தியான வனத்திற் சென்று, உல்லாசமாய்க் காலங் கழித்துக்கொண்டிருக்கையில், ராஜ சமஸ்தானத்தில் மஹா பிரசித்தியடைந்த படைவீரர்களைப் பற்றியும், அமைச்சர்களைப் பற்றியும் கவிவாணர்களைப்பற்றியும் சம்பாஷிக்கலானார்கள். தம்முடைய அரசாட்சிக்கு உட்பட்ட நாட்டுக்குப் பெரும் பிரயோசனத்தை விளைப்பவர் ஆண்மையிற் சிறந்த போர் வீரரா? அல்லது, மதியூகிகளாகிய மந்திரிகளா? அல்லது, கேட்போர் உள்ளங்கரையும்படி பாக்களைச் செய்யவல்ல கவிவாணர்களா? என்று அப்

பெண்கள் கூட்டத்திற்குச் சபாநாயகியாயிருந்த மங்கையர்க்கரசி, தன் புதல்விகள் மூவரையும் நோக்கி வினவினள். அதைக்கேட்ட மீனாக்ஷி என்னும் மூத்த பெண், "மேற்சொல்லப்பட்ட மூவகையாருள்ளும் சுத்தவீரர்களே நாட்டுக்குப் பெரும் பிரயோசனத்தை அளித்துவருகின்றனர்" என்றும், காமாக்ஷி என்னும் இரண்டாம் பெண்,' மந்திரிகளே தேசத்துக்குப் பெரும் பயனைக் கொடுத்து வருகின்றனர்' என்றும், விசாலாக்ஷி என்னும் மூன்றாம் பெண் "கவிவாணர்களே நாட்டுக்குப் பெரும்பயனை நல்கி வருகின்றார்கள்" என்றும் விடைபகர, மங்கையர்க்கரசி தன் அருமைப் புதல்விகள் தம்முள் மாறுபடும் வெவ்வேறு அபிப்பிராயங் கொண்டதாக வியந்து, "என் கண்மணிகளே, என் செல்வப் புதல்விகளே, நீங்கள் கொண்ட அபிப்பிராயத்துக்கு முறையே தகுந்த காரணங்கள் கூறுவீர்களாக" என்று கூறினன்.

மலையாள மல்லிகை.

இப்புஷ்ப விதையை உங்கள் பங்களாக்களிலும் பூந்தோட்டங்களிலும் பயிர் செய்யுங்கள்! 6 அடி உயரமுள்ள ஒவ்வொரு செடியிலும் குதூகல வாசனை யுடையதும் 8 அங்குல சுற்றளவுடையதுமான சுமார் 500 புஷ்பங்கள் ஒரே தடவையில் புஷ்பித்து அலங்காரப் படுத்துவதுடன் பாம்பு முதலிய விஷஜெந்துக்கள் வராமலும் காப்பாற்றும். சிகப்பு, மஞ்சள், வெள்ளை கலப்பு விதை பாக் கெட்டு 1 ச்கு ரூ 0-4-0; 1 டஜன் பாக்கெட்டுகளுக்கு ரூ 2-8-0.

ஒரு பாக்கெட்டு தனியாகத் தேவையுள்ளவர்கள் 5 அணா ஸ்டாம்பு அனுப்பினால் போதும்.

S. C. நாதன்,
எலப்புள்ளி, பாலக்காடு.

210779

## மீனாக்ஷி செய்த உபந்நியாசம்:

என்னை ஈன்றெடுத்த அன்னையே, என் அருமைச் சகோதரிகளே, மித்திரிகளே, சாஸ்திரங்களில் மிகவும் தேர்ச்சி யுள்ளவர்களே, விவகரிக்கத்தக்க இந்த அருமையான விஷயத்தைக் குறித்து நான் பேசத் தொடங்குவது, 'குன்றினிற் பிரசந் தன்னை யறிவிலாப் பங்கனேறி யருந்துவே னென்பதொக்கும்.'—மலையிலுள்ள தேனை அறிவில்லாத முடவன் ஏறிப் புசிப்பேன் என்பதை நிகர்க்கும். இந்தக் கேள்வி ஒருவனுடைய தேகத்தில் சிரம், இருதயம், கரம் என்னும் மூன்று அவயவங்களில் எது மிகச் சிறந்தது என்னும் வினவை யொக்கும். தேகம் ஆரோக்கிய ஸ்திதியிலிருப்பதற்கு இம்மூன்று அவயவங்களும் முக்கியமானவை. பகைவர்கள் வராவண்ணம் தேசத்தைக் காப்பதற்கான சௌரியம், பராக்கிரமம் இவற்றைப் பெற்றிருக்கும் சுத்தவீரனே ஒரு தேசம் என்னும் சரீரத்துக்குக் கரம் ஆவான். இன்னின்ன காலத்தில் இன்னின்னவற்றைச் செய்வது யுக்தமென்று எதிர்கால உணர்ச்சியுடன் கூறுவதற்கு வேண்டிய நுட்ப புத்தியாகிய அறிவைப் பெற்றிருக்கும் மந்திரியே அந்தத் தேசம் என்னும் சரீரத்துக்குச் சிரம் ஆவான். தேசத்திலுள்ள எவ்வகைப்பட்ட குடி ஜனங்களும் அழுக்காறு, அவா, வெகுளி முதலிய தீக்குணங்களை விடுத்துத் தெய்வ

பக்தி பெற்றுச் சுசீலர்களாகிப் பிறவியை ஒழித்துப் பரலோக இன்பத்தை அடைவதற்கு வேண்டிய சுகுணங்களை ஊட்டவல்லவனாகிய கவிவாணனே யாதொரு தேசம் என்னும் சரீரத்துக்கு இருதயம் ஆவான். ஆகவே, இம்மூவரில் ஒவ்வொருவனும் ஒவ்வொரு விஷயத்துக்கு இன்றியமையாதவன் என்பது யாவருக்கும் உடன்பாடான விஷயம். ஆயினும், இம்மூவருள் நாட்டுக்குப் பெரும்பயனைத் தரத்தக்கவன் இன்னானென்பதை நியாயவாயிலாகக் காட்ட வேண்டியிருக்கிறபடியால், சுத்தவீரனே ஏனைய இருவரினும் பெரும்பயனை விளைக்கத்தக்கவன் என்பது என் கொள்கை. இதனை நாட்டுவதற்குச் சமாதானங் கூறுகிறேன்: மதியூகியாகிய மந்திரியும் பாவலனாகிய கவிவாணனும் இருந்த இடத்திலிருந்தே இப்படி அப்படி என்று வாயினாலே அளக்கலாம். பகைவர் எதிர்த்து வந்த காலத்து அமர்க்களத்தில் நின்று சௌரியத்துடனும் வீராவேசத்துடனும் புறங்காட்டாது போர் புரிந்து தன் நாட்டிலுள்ள குடிகளுக்கு ஹானி நேரிடாவண்ணம் அவர்களை இரட்சித்துத் தன் அரசன் விஷயமாய்ச் செஞ்சோற்றுக் கடனைச்செலுத்தும சுத்தவீரனே ஏனைய இருவரினும் சிறந்தவன். அவன் அமர்க்களத்திலிருந்து பகைவரைச் சேதியாவிட்டால் செங்கோலெங்கே? மந்திரி எங்கே? கவிவாணனெங்கே? இவ்வுத்தியான வனம் எங்கே? நாம் இவ்வளவு மனோகரமாய்க் கூடிச் சம்பாஷிப்பதெங்கே? குடிஜனங்களுக்கு நிர்மதியான சுகவாழ்க்கை எங்கே? வர்த்தகமெங்கே?



யாவும் சூறையிற் பட்ட பஞ்சுபோல் அலையவேண்டியதல்லவா? உலகத்தில் சம்பத்தான திசையிலிருந்த பற்பல தேசங்களின் ஸ்திதியைச் சற்று யோசித்துப் பார்ப்போம். எந்தத் தேசத்தில் இராணுவபலம் அதிகமாயிருந்ததோ அதுவே ஏனைய எல்லாத் தேசங்களையும் தன்னடிப்படுத்தித் தனியரசு புரிந்து வந்ததென்று சரித்திரங்கள் சாக்ஷி கூறுகின்றன. ரோம், ஸ்பார்டா, பிரிட்டன் முதலிய ராஜ்யங்களின் பெருமைக்கெல்லாம் புஜபல பராக்கிரமம் பெற்றுத் தேசாபிமானம் பூரணமாய் நிறைந்த இராணுவ வீரர்களே காரணமாயிருந்தனர். கிரீஸ் தேசத்தின் பூர்வீக சரித்திரமும் இந்த விஷயத்தை உண்மையென்று பறையறையும், கல்வி நாகரிகம், தெய்வபக்தி முதலிய யாவும் வேற்றரசர் படையெடுத்து வருங்காலத்துக் குடிகளிடத்தில் எங்ஙனம் சிறந்தோங்கும்? போர் நேரிடாதபடி தடுப்பவனும் போர் நேரிட்டவிடத்து பகைவரைச் சேதித்துத் தன் நாட்டுக் குடிகளைக் காப்பவனும் ஆண்மையிற் சிறந்த சுததவீரனே யாவன். அவனுடைய செய்கையைத் தான் பரம புருஷார்த்தம் என்று சொல்லவேண்டும். ஹைதர், டிப்புசுல்தான் முதலியவர்களுடைய பெயரை இப்போது கேட்டாலும் கர்ப்பம் கலங்குகிறதல்லவா? இவர்களும் இவர்கள் சைனியங்களும் நாற்புறமும் குடிகளை இம்சித்து, அவர்களுடைய பொருள்களை யெல்லாம் கொள்ளைகொண்டு, யாவர் வயிற்றிலும் தீமூட்டி வந்தகாலத்து, மந்திராலோசனை சொல்லத்தக்க அமைச்சர்களும்

நவரசத்துடன் பாக்கள் பாடவல்ல கவிவாணர்களும் போக்கற்றுத் தஞ்சம் அளிப்பாரின்றித் தெய்வமே! தெய்வமே! என்று அலறிக் கூக்குரலிட்டுப் பிலங்களிலும் வனாந்தரங்களிலும் போயன்றோ ஒளித்திருப்பார்கள்! இவ்விந்திய தேசத்துச் சோமநாதபுரம் முதலிய தேவாலயங்களெல்லாம் பட்டபாடு தெரியாதோ? இத்தியாதி மனக்கலக்கங்களை யெல்லாம் நீக்கித் தேசத்துக்கு நன்மையைத் தரத்தக்க சுத்த வீரர்களென்னும் சூரியர்கள் இராமையினாலன்றோ, கொடுங்கோன்மை என்னும் இருள் நம் தேசத்தை மூடி வெற்றிகொண்டிருந்தது! ஆகையால், ஏனைய இருவரினும் ஆண்மையிற் சிறந்த சுத்தவீரனே யாதொரு தேசத்துக்குப் பெருத்த நன்மையைச் செய்யத் தக்கவன்.

## விஜயதசமியில் விளம்பிய வாழ்த்து

### கொச்சகக் கலிப்பா

அருள்வளரும் முகமலரும் அடைந்தவரை ஆதரிக்கும்
தெருள்வளரும் திருமனமும் திருவளரும் தனிவளமும்
மருள்வளரும் பயமொழிந்த மனத்திடமும் குறைவற்ற
பொருள்வளமாம் உடனலமும் பொருந்துவாழ் வருள்கெனவே
பச்சைமா முகில்படியும் பழனிமலை மேவியன்பர்க்
கிச்சையா னவையளிக்கும் எழில்வடிவே லவனருளால்
சச்சிதா நந்தமுற்றுத் தனியுறவு கொண்டுமகிழ்
உச்சிதஞ்சேர் சுப்ரமண்ய பாரதியா முறவோன்யான்
கலைமகளைத் திருமகளைக் கருணையுட னுலகளிக்கும்
மலைமகளை வணங்கியவர் மலரடிகள் முடிகொண்டு
நலமளிக்கு மரியதிரு நாளான தசமியிலே
நிலையளிக்கும் தமிழ்பாடி நின்றுதுதி புரிகுவனே.

திரு. அ. சுப்ரமண்யபாரதி.

## காமாக்ஷி செய்த உபந்நியாசம்

பரிவிற்சிறந்த தாயே, பெறுதற்கரிய சோதரிகளே, தோழிகளே, நெடுங்கால அநுபவமும் ஆழ்ந்த கல்வித் தேர்ச்சியும் அத்தியாவசியமாய் வேண்டியிருக்கிற இந்த அருமையான விஷயத்தைப் பற்றி யான் புகலத் தொடங்குவது, பாற்கடலைச் சிற்றெறும்பு பருக நினைப்பது போலும். யாதொரு தேசமென்னும் சரீரத்திற்குச் சுத்தவீரன் கை என்றும், மந்திரி சிரம் என்றும், கவிவாணன் இருதயம் என்றும் என் மூத்த சகோதரி எடுத்துக் கூறிய உபமானமே உபமானம்! பலத்தைக் கொண்டு பகைவரை வெல்லுவது முதலிய காரியங்களைச் செய்வதனால் சுத்தவீரனைக் கரத்துக்கும், புத்திக் கூர்மையினால் ஆலோசனை சொல்லுவதிற் சிறந்தவனும், அதற்கு அத்தியாவசியமாக வேண்டிய விவேகத்தின் ஸ்தானம் சென்னி யானபடியாலும் மந்திரியைச் சிரத்துக்கும், தெய்வ பக்தி முதலியவற்றைப் பிரஜைகளுக்கு உண்டாக்குவதனால் கவிவாணனை இருதயத்துக்கும் மீனாக்ஷி உவமித்தனள். அவ் வுபமானம் சால அழகுடைத்து யாதொரு காரியத்தின் யுக்தாயுக்தத்தைப் பற்றியாவது, அதைச் செய்யும் விதத்தைப் பற்றியாவது விவேகம் நிச்சயித்துக் கூறிய பிறகல்லவா கை செய்ய ஆரம்பிக்க வேண்டியது? புத்தியை ஆதாரமாகக்

கொள்ளா விடத்து அசேதனப் பொருளாகிய கரம் பயனில்லையே? சரீரத்தின் விஷயத்தில் எப்படியோ அதுபோலவே யாதொரு தேசத்தின் விஷயத்திலும் மந்திரி பகைவரை வெல்லும் இடம், காலம், கருவி, வகை முதலியவற்றை விவேகத்தினா லறிந்து கூறினா லன்றி, எவ்வளவு ஆண்மையிற் சிறந்தவனா யிருக்கினும் சுத்தவீரனுடைய செய்கை ஒன்றுக்கும் பயன்படாது.

'தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.'

யாதொரு காரியத்தைச் செய்யும் விதங்கள் பலவாகத் தோன்றின விடத்து அவற்றுள் அதி யுக்தமானதை ஆராய்ந்து அறிவதிலும், அப்படிப்பட்டதைச் செய்கையில் அது பயன்படும் விதத்தை நாடிச்செய்வதிலும் சிலரைப் பிரித்தல், பொருத்தல் ஆகிய இச்செயல்களிலே துணிவு பிறக்கும்படி வற்புறுத்திக் கூறுவதிலும் வல்லவனே அமைச்சன் என்று நாயனார் கூறியுள்ளார். ஆகவே, இவ்வளவு காரியங்களை யெல்லாம் விவேகத்தினா லறிந்து, யாதொன்றைச் செய்ய அமைச்சன் உத்தரவு கொடுத்தா லல்லவா அதைச் செய்கையில் சுத்த வீரனது ஆண்மை பயன்படும்! தேகத்தினால் மாத்திரம் வருந்தி யுழலுவது எவ்வளவு வியக்கத்தக்கதாயினும், உலகத்தில் அதற்குச் சிறப்பில்லை. விவேகத்தைக் கொண்டு உழைத்தல் எவ்வளவு சிறிதாயினும் அதற்கே பெருமை அதிகம். நியாயாதிபதி, சேவகன் ஆகிய இருவரில் யாருக்கு அதிகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது? யாரை உலகத்தார் அதிகமாய் மதிக்கிறார்கள்? வெயிலிலும் மழையிலும் வருந்தி ஓடித்திரியும் சேவகனுடைய சரீரப் பிரயாசைக்கெல்லாம் சம்பளம் பத்து ரூபாய்தான். சுகமாய் இருந்த இடத்திலிருப்பவனைப்போற் காணும் நியாயாதிபதிக்குச் சம்பளம் ஆயிரம் ரூபாய் கணக்காக இருக்கிறது. அது போலவே தேகபலத்தைக் கொண்டு போர்புரியும் சுத்தவீரர்களைக் காட்டிலும் அவர்கள் யாவரையும் பிரேரேபிக்க, இருந்த இடத்திலிருந்து விவேகத்தினால் உழன்று யுக்தாயுக்தங்களைச் சொல்ல வல்ல அமைச்சனே சிறந்தவனாகின்றான். சுத்தவீரர்கள் பாவைகளுக்குச் சமானம். அமைச்சனே அவற்றை ஆட்டுவிக்கும் சூத்திரதாரியைப் போன்றவன். கரசரணாதி அவயவங்களுடன் அதிஅற்புதமாய் இயங்கும் பாவைக்கு வரும் பெருமையெல்லாம் சூத்திரதாரியைத்தான் சேரும். ஏனெனில்,

'நன்னாரிற் பூட்டிய சூத்திரப் பாவைநன் னார்தப்பினால்
தன்னாலு மாடிச் சலித்திடுமோ?'

அன்றியும், சுத்தவீரனுடைய செய்கையெல்லாம் பெரும்பாலும் சுயப்பிரயோசனத்தை நாடியதாகவே இருக்கின்றது. போர்க்களத்தில் தன் இன்னுயிரைக் காப்பதற்காகவாவது, உலகத்தில் புகழை நாட்டுவதற்காகவாவது, ஒருவேளை இறந்தால், வீரசொர்க்கத்தை யடைவதற்காகவாவது, சுத்தவீரன் தன் ஆண்மையைக் காட்டுகின்றானேயன்றித் தன் நாட்டாருடைய அசேஷ க்ஷேமத்தை அவன் அமர்க்களத்தில் கருதுகிறதாகத் தோன்றவில்லை. அல்லாமலும், அமர்க்களத்தில் சதா உதிர வெள்ளத்திலே நீந்துவது ஒன்

றையே தனக்குப் பெரும் பொருளென மதிப்பவனாகிய சுத்த வீரனிடத்து இரக்கம், பச்சாத்தாபம், அன்பு, தெய்வபக்தி முதலிய சற்குணங்கள் எங்ஙனம் அமையும்? அமைச்சனோ மேற்கண்ட சகல சற்குணங்களையும் பொருந்தினவனாயும், 'அனைவோர்க்கும் தெய்வம் இலை முகப் பைம்பூண் இறை' என்றபடி, குடிகளுக்குத் தெய்வமாயுள்ள அரசனுக்குக் கண்ணுங் கவசமுமாயும் இருக்கின்றான். கவிவாணன் தரித்திரதசை யடைந்து, பிறரிடத்து யாசிப்பதையே தனக்கு விரதமாகப் பூண்டவனானபடியால் யாதொரு தேசத்துக்கு அவனால் ஒரு சிறிதும் நன்மை யுண்டாகமாட்டாதென்பதே என் கொள்கை. மேற்போந்த நியாயங்களினால் சுத்தவீரன், மந்திரி, கவிவாணன் ஆகிய மூவரில் மந்திரியே ஒரு தேசத்துக்குப் பெரும்பயனைத் தரத்தக்கவன் என்பது என் துணிபு.

நடனமாடும் பட்சி:—

இங்கிலாந்தில் எ. ஸ்டான் கிளிப் என்பவரிடம் உள்ள 'மீட் ஜிம்மி' என்ற ஓர் வாத்து மிகவும் விநோதமானதோர் பறவையாம். இதுவேதான் அவரது முகத்தைக் கழுவுகிறதாம். அவர் தோளின்மேல் குதித்து உட்கார்ந்து கொள்ளுகின்றதாம்; நடனம் செய்கிறதாம், ராஜ வாழ்த்துப் பாடும்பொழுது போர் வீரர்களைப் போன்று காலைத் தூக்கி வந்தனம் செய்கிறதாம். ஊர்வல காலங்களில் அது தன் எஜமானன் பக்கத்தில் நடந்து போகிறதாம். இதுவும் குடும்பத்தார்களோடு நாற்காலி மீதில் மேஜைமுன் அமர்ந்து போஜனம் செய்யுமாம். தேநீர்ப் பானம் செய்யுமாம். சனிக்கிழமைகளில் ஐஸ்கிரீம் சாப்பிட ஆவலாயிருக்குமாம். ஜிம்மியும் எஜமானும் பெரிய விருந்துகளில் மிகவும் விரும்பப் படுகின்றார்களாம்.

## மதியூகமுடைய மந்திரி.

ஒரு வேந்தனுக்கு மக்கட்பேறில்லாமற் போயிற்று. அவன், நமக்குப்பின் இந்த அரசை ஆளுவதற்கு ஒரு பிள்ளை யில்லாமற் போயிற்றே என்று வருந்திய வண்ணமிருந்து, ஒன்றையும் கவனியாமலிருந்தான்.

அப்பொழுது அவனிருந்த பக்கமாய் அவனை வளர்த்த செவிலித்தாய் சென்றாள். அவளைக்கண்டதும் அரசன் அவளை அழைத்து, "உன்னைக் கண்டதும் எனக்கொரு யோசனை தோன்றிற்று" என்றான். அவள் "அது என்ன" என, அரசன் 'எனக்குப் பின் இவ்வரசையாள ஒரு மகனில்லையே என்று வருந்திக்கொண்டிருந்தேன். நீ வந்ததும் உன் மகனை எனக்குப் பின் அரசனாக்குவதெனத் தீர்மானம் கொண்டேன். அவன் எனக்கு ஒரு முறையில் தம்பியாகிறான்" என்றான்.

செவிலித்தாய் "உன் இஷ்டம்! சந்தோஷம்! நாங்கள் பாக்கியம் செய்தவர்களானோம்" என்று சொல்லிப் போய்விட்டாள்.

அப்பால் அரசன், சபைக்குச் சென்று தன் அமைச்சர்களிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தான். அவர்கள், "செவிலித்தாயின் மகன் தங்களுக்கெப்படி தம்பி யாகிறான்" என்று கேட்க, வேந்தன் அமைச்சர்களே, நானும் அவனும் ஒரே தாயாரின் முலைப் பாலுண்டு வளர்ந்தோ மல்லவா? அந்த வழியில் நாங்கள் சகோதரர்களாகிறோ மல்லவா?" என்றான்.

அமைச்சர்கள் அவ்வமயம் "அப்படியே செய்வோம்" என்று ஒப்புக்கொண்டதுபோல் தலை அசைத்தனர். பின் மறுநாள் அந்த அமைச்சர்களில் ஒருவன் ஓர் பசுங்கன்றுடன் சபைக்கு வந்தான். அரசன் பசுங்கன்றைக் கண்டதும் 'இது ஏன் பசுங்கன் றிங்கே' என, மந்திரி நகைத்து, "வேந்தே, இது எனக்குப்பின் மந்திரி பட்டத்திற் குரியது. எப்படி யென்றால் இதனுடைய தாய்ப் பாலை நானுண்டு வளர்ந்தேன். இந்தக் கன்றும் அந்தத் தாயினுடைய பாலைத் தானே குடித்து வளர்ந்திருக்கிறது. அந்த முறையில் இது எனக்கு உடன் பிறப்பாகு மல்லவா?" என்றான்.

அரசன் கேட்டு நகைத்து, 'நான் செவிலித்தாய் மகனுக்குப் பட்டங் கட்டுவதாக நிச்சயித்தது தகாத செய்கை யெனத் தெரிவிக்க இந்த யுக்தி செய்தீர் போலும்! நல்லது, எனக்குப் பின் அரசு புரிவதற்கு யாருளர்?" என்றான்.

அமைச்சர் 'தாயாதிகளில் எந்தப் பிள்ளையேனும் தத்துக் கொள்ளலாம். இல்லாவிட்டால் அபிமான புத்திரனாக யாரையேனும் அடையலாம். செவிலித் தாய் மகனை ஏன் அபிமான புத்திரனாகக் கொள்ளப்படாதென்றால், அவன் இராஜ குடும்பத்தைச் சார்ந்தவனாகா னல்லவா?" என்றான். அரசன் கேட்டுத் தன் தப்பித முணர்ந்து அந்த ஆலோசனையை மறந்தான்.

## சில சொற்களில் அடங்கிய பல விஷயங்கள்

---

### செட்டு.

நன்றாய்த் தெரிந்த மனிதன் தனக்கு மிகவும் பிரயோஜனமும் சுகமும் தருவதுமான வழியிலேயே தன் பணத்தைச் செலவழிப்பான்; மூடனோ தனக்கும் பிறருக்கும் சுகமும் பிரயோஜனமு மன்றி வீணிலேயே தன் கைப்பொருளை யழித்துவிடுவான். தெரிந்த மனிதன் தன் காலத்தில் ஒவ்வொரு நிமிஷத்தையும் செவ்வையாயும், புத்திசாலித்தனமாயும் செலவழிப்பதுபோல, தன் சம்பாத்தியத்தில் ஒவ்வொரு தம்படியையும் அப்படியே செலவு செய்வான்; தெரியாத மூடனோ தனக்கு வேண்டாதவை யெல்லாம் காசு கொடுத்து வாங்குவான்; வேண்டியவைகளை வாங்கினால் காசு கொடுக்க மாட்டான். பொடிடப்பி, பொன் கடிகாரம், பிரம்புப்பிடி, நாய், பூனை, கிளி, கௌதாரி இவை முதலானவைகளில் தன் பணத்தை வீணாய்க் கொட்டுவான். அவனுடைய அசட்டுத் தனத்தை அவன் வேலைக்காரர்கள் அறிந்துகொண்டு அவனை மோசம் செய்ய ஒவ்வொரு விதத்திலும் முயன்று வருவார்கள். சொற்ப காலத்துக்குள் தன்னைச் சுற்றிலும் உபயோகமற்ற பதார்த்தங்கள் நிறம்பி யிருப்பதையும் ஒருவேளை சோற்றுக்குக்கூட வேண்டியவைகள் இல்லாதிருப்பதையும் அவன் காணக்கூடும்.

செலவுவிஷயத்தில் சட்டதிட்டம் இல்லாவிடில் குபேரன் பாக்கியம் கூட ஒருவனுக்கு வேண்டிய செலவிற்குப் போதாமற் போகும். சட்டதிட்டம் யாரிடத்திலிருக்கிறதோ அவன் கோமணாண்டியாயிருந்தாலும் தன் செலவுக்குப் போதுமானவை தன்னிடத்தில் இருக்கக் காணுவான். உன்னால் கூடியமட்டும் நீ வாங்குகிற சாமான்களுக்கு ரொக்கப் பணம் உடனுக்குடனே கொடுத்துவிடு. கடையில் கைச்சாத் தென்பதைக் கட்டாயமாய் நிறுத்து. நீ கொடுக்கவேண்டிய பணத்தைக்கூட நேராக உன் கையாலேயே கொடுத்துவிடு. வேலைக்காரர்களின் மூலமாய் ஒருநாளும் நம்பி அனுப்பாதே. ஏனெனில் அவர்கள் பணத்தைக் கடைக்காரனிடம் கொடுக்கும்பொழுது எனக்கேதாவது சன்மானம் இல்லையா வென்று கொஞ்சத்திற்குக் கொஞ்சம் தரகு வாங்கிக்கொள்வார்கள். அது எப்பொழுதும் உன் க்ஷேமத்திற்குக் குறைவு. தயிர், மோர், பால், துணிமணி முதலான இவைகளுக்குக் கைச்சாத் தில்லாமலிராது. இவைகளுடைய விலையை அந்தந்த மாசம் உன் கையாலேயே கொடுத்துவிடு. ஒரு மாதத்திற்குமேல் கடையில் கணக்கு வைத்துக் கொள்ளாதே. செட்டென்பதைத் தப்பாக அர்த்தங்கொண்டு உனக்கு வேண்டாதவைகள் வெகு மலிவாய் இருந்தால், அவைகளை வாங்கி நிரப்பாதே; உன் வரவுசெலவுக்கு எப்பொழுதும் கணக்கு வை. வரவையும் செலவையும் எழுதித் தகுந்தபடி செலவு பண்ணுகிறவன் ஒருநாளும் துன்பத்திற்கு உள்ளாகமாட்டான்; கணக்கு வைக்க வேண்டுமென்றால் ஒரு தம்படி கொத்தவரக்காய், இரண்டு தம்படி கருவேப்பிலை யென்றெழுதுவதன்று; அவைகள் ஏட்டுக்கும் எழுத்தாணிக்கும் தகுந்தவையே அல்ல. சில லோபிகள் ஒருகால் எழுதி வைத்துக்கொள்ளலாம்; அது அவர்களுக்கே இருக்கட்டும், நமக்கு வேண்டாம். செட்டென்பதில் உன் வாழ்நாள் முடிய ஜாக்கிரதையாயிருந்து, வேண்டியவைகளைச் சேகரித்து வேண்டாதவைகளை இகழ்ச்சியுடன் அகற்றி நீ சுகித்து வாழ்ந்திருக்க வேண்டும்.

## பரிசுத்தம்.

ஒவ்வொரு மனிதனும் மிகவும் பரிசுத்தமாய் இருக்கவேண்டும்; கைகள் நகக்கண்கள் முதலான இடங்களில் அழுக்கே இருக்கக்கூடாது. பல்லில் எப்பொழுதும் ஊத்தையும், சதா நாறும் வாயும் எப்பொழுதும் ஒரு மனிதனிடமிருக்குமேயானால் ஜனங்கள் அவனிடத்தில் எவ்வளவுக் கெவ்வளவு பிரியமற்றிருப்பார்களோ அவ்வளவுக்கவ்வளவு கொடிய நோய்களும் அவனை வருத்தும். நகக்கண்களெல்லாம் அழுக்கடைந்தும், நகங்கள் முழநீளம் வளர்ந்தும், வரட்டு வரட்டென்று எப்பொழுதும் சொறிந்துகொண்டும் ஒரு மனிதன் இருப்பானேயானால் அவனைக்கண்டால் யாருக்குத்தான் அஸஹ்யம் வரமாட்டாது. ஆகையால் நீ யாரிடமாவது போகுமுன் கைகால்களை நன்றாய்ச் சுத்திசெய்துக் கொள்வதுடன் நகக்கண்களில் அழுக்குகளில்லாமல் நன்றாய்க் கழுவ வேண்டும், அடிக்கடி க்ஷௌரம் பண்ணுவித்துக் கொள்ளும் பொழுது நகங்

களை அதிகமாய் வளரவிடாமல் கறுக்கிக்கொண்டு வர வேண்டும். காதுகளிலும் மூக்குத் துவாரங்களிலும் அடிக்கடி விரலை விட்டுக் குடைந்துகொண்டே இருக்கக் கூடாது. காலையிலே எழுந்து முகத்தைக் கழுவும் பொழுதே காது மூக்குகளையும் கழுவவேண்டும். அடிக்கடி மூக்கை சிந்திக்கொண்டிருப்பது அவலக்ஷணமானது. சிலர் தலையை அல்லது தேகத்தில் ஏதாவது ஒரு பாகத்தைச் சொறிந்து விட்டுப் பிறகு மோர்ந்து பார்ப்பது வழக்கம். இது மிகவும் விகாரமான வழக்கம். இவைகளன்றியில் இன்னும் அநேகம் அவலக்ஷணமான குணங்களு முண்டு. அவைகளையெல்லாம் நீ கவனிக்கும் பக்ஷத்தில் தானாகவே அறிந்துகொள்வாய். அன்றியும் உன் தேகம் சௌக்கியத்திற்குப் பரிசுத்தமான வஸ்திரங்கள் உடுப்பது மிகவும் முக்கியம். இளமை முதல் இவைகளில் நீ ஜாக்கிரதையாய் இருப்பாயானால் நீடித்த காலம் நல்ல பெயரெடுத்து வாழ்வாய். அப்படியின்றி எப்பொழுதும் பரிசுத்தமின்றி இருப்பாயாகில் 20, 30 வயதுக்குள்ளே எல்லாரும் இகழும்படியாகி, 40, 50 வயதுக்கெல்லாம் உடல்மெலிந்து தளர்ந்து போவாய்.

## உடுப்பு.

ஜனங்களுடைய மனதைச் சந்தோஷிப்பிக்க உடுப்பும் ஒரு முக்கியமான சாதன மாகையால், எப்பொழுதும் நாம் நமது உடுப்பு விஷயத்தில் வெகு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். சிலர் ஒரு மனிதனுடைய உடுப்பைக்கொண்டே அவன் இப்பேர்ப்பட்டவனென்று நிதானித்து விடுவார்கள். ஒரு மனிதன் வெளியில் உடுப்புவிஷயங்களில் எவ்வளவுக் கெவ்வளவு டாம்பீகனாய் இருக்கிறானோ, அவ்வளவுக் கவ்வளவு அறிவின்மை அவனிடம் விளங்கும். ஆகையால், புத்திமான்கள் எல்லாரையும்விடப் புதிய மாதிரியாய் ஒரு நாளும் வேஷ்டி முதலானவைகளைக் கட்டிக் கொள்ளவே மாட்டார்கள். எப்பொழுதும் தங்கள் தேக சௌக்கியத்தின் பொருட்டே பரிசுத்தமுள்ளவர்களா யிருப்பார்கள். ஒரு மனிதன் தானிருக்கு மிடத்தில் நல்ல ஸ்திதியிலுள்ள புத்திமான்கள் எந்த மாதிரி உடுப்புகள் தரித்துக் கொள்வார்களோ அந்த மாதிரி தரித்துக் கொள்ளவேண்டும். அதிகமாய்ப் போட்டுக் கொண்டால் டம்பாச்சாரியாம். அற்பமாய்ப் போட்டுக் கொண்டால் மரியாதையற்றவனாகும். அற்பமாய்ப் போட்டுக் கொள்வதைவிடச் சிறிது அழகான உடைகளைத் தரிப்பதே எப்பொழுதும் நலம்.



தெரிந்தவனுக்கும் டம்பாச்சாரிக்கும் என்ன வித்தியாஸ மென்றால் டம்பாச்சாரிதான் போட்டுக்கொள்ளும் உடுப்புகளைக்கொண்டு தன்னை விலைமதித்துக் கொள்ளுகிறான்; தெரிந்தவனோ டம்பாச்சாரியைக் கண்டு மனதிற்குள்ளேயே நகைத்துக்கொண்டு தனக்கும் அப்படி பெயர் வராமல் உசிதமாய் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு அணிந்து கொள்ளுகிறான்.

நாம் ஒருநாளும் ஒரு டம்பாச்சாரி போட்டுக் கொண்டிருக்கும் உடுப்பைப் பார்த்து மலைத்து அவனைப்போலப் போட்டுக் கொள்ள முயலக்கூடாது; நம்

மைச் சுற்றிலு மிருக்கிற பிரசித்தி பெற்ற பெரியோர்கள் உடுப்பதுபோல நாமும் உடுக்க முயலவேண்டும். ஒருநாளும் ஜனங்கள் நம்மைச் சுட்டிக் காட்டும்படியான தனித்த உடுப்புகள் தரிக்கவே கூடாது. நாம் ஒரு தடவை வேஷ்டி கட்டிக் கொண்ட பிறகு அன்று முடிய அது சரியா யிருக்கும்படியாகவும் அது அவிழ்ந்துபோமே யென்கிற கவலையன்றியிலும் இருக்க வேண்டும். பிடிப்பான உடுப்புகள் தரித்துக்கொள்ளவே கூடாது.

---

## சிறிதும் பயன் படாதவர்.

பதராகிலும் சமையல் செய்வதற் குதவியாம்
பழமை பெறு சுவராகிலும்
பலருக்கு மறைவாகும் பாசுபடு கந்தையும்
பளிங்குபோல் கடிதமாகும்
கதமிகு கடாவெனில் உழுதுபுவி காக்கும் வன்
கழுதையும் பொதி சுமக்கும்
கல்லெனில் தேவர்கட் காலயமாம் பெரும்
கான்புற்றும் அரவ மனையாம்
இதமிலாப் பாஷாணமுஞ் சிலர் நோய்கொளும்
இழிவுறு சுரங்காயினும்
இரக்கப் பிடித்தார்க் குதவி செய்வர் வாருகோல்
ஏற்ற மாளிகை விளக்கும்
மதமிகும் பரமலோபரால் உபகாரம்
மற்றொருவருக்கு முண்டோ
மனதிலனு தினமுங் கடவுளை யேத்து மைந்தனே
மாற்றமிது உண்மை மதலாய்.

---

(மதலைச் சதகம்

## மண்ணெண்ணெய் விளக்கின் தீங்குகள்.

---

மண்ணெண்ணெய் மற்றைய நெய்களிலும் விலையிற் குறைந்ததாக விருப்பினும் அதனை உபயோகிப்பதால் அநேக தீங்குகள் உண்டாகின்றன. சாதாரண சனங்கள் இவ் விஷயத்தை ஒப்புக்கொள்ளப் பின்னிற்பது மல்லாமல் பகடியும் பண்ணுவர். ஏனெனில், ஒரு பொருளின் விலையைப் பற்றி ஊன்றி யோசிக்கும் வழக்கமன்றி அப்பொருளால் விளையும் நன்மை தீமைகளைப் பற்றி ஊன்றி யோசிக்கும் வழக்கம் நம்மனோருள் அநேகரிடத் தில்லை. இவ்வித கண்மூடித்தனமே நம்முடைய தற்போதைய கஷ்டங்கட்கு முதற் காரணமாம்.

இந் நாட்டிற்கு மண்ணெண்ணெய் முதல் வந்தபோது சனங்கள் வெகு ஆர்வத்துடன் வாங்கிச் சிறு போத்தல் விளக்குகளில் உபயோகிக்கத் தொடங்கி, நாட்செல்ல நாட் செல்ல விலையிற் குறைந்த சிறு போத்தல் விளக்குகளை விடுத்துச் சுவரில் மாட்டுதற் கேதுவாகச் செய்யப்பெற்ற தகர விளக்குகளை உபயோகித்து வந்தனர். மேலைத்தேச நாகரீகம் இன்னும் சிறிது பரவ, மேற் குறித்த விலை குறைந்த விளக்குகளை விடுத்து அதிக விலையுள்ள மேசை விளக்குகளையும் தூக்கு விளக்குகளையும் வாங்கி உபயோகிக்கத் தொடங்கினர். தற்காலம் மேலைத்தேச நாகரீகத்தில் மூழ்கி யிருக்கும் செல்வவந்தர் மாளிகையில் இருநூறு முன்னூறு ரூபாய் விலையுள்ள கண்ணாடி விளக்குகளை

யும் வெள்ளி, தங்கமுலாம் பூசிய விளக்குகளையும் காணலாம். ஆரம்பத்தில் கால் அணா விலையுள்ள போத்தல் தகர விளக்குகளை உபயோகித்து இப்போது கண்ணாடி விளக்குகட்காக நூற்றுக் கணக்காகச் செலவு செய்கின்றனர். பல வர்ணங்களையுடைய கண்ணாடி விளக்குகள் பார்ப்போர் கண்களுக்கு அழகாயிருப்பினும் அவைகள் சுத்தி பண்ணப் படும்போது கைதவறிக் கீழே வீழ்ந்தால் கால் அணாவுக்குத் தானும் பிரயோசனப்படாக் கதியை அடைவன. இவ் விளக்குகளுக்குச் சிம்னி யென்றொன்று தேவை. இவைகளும் சுத்தி பண்ணப் படும்போது உடைந்து போகின்றன. ஆகவே, விலையிற் குறைந்த மண்ணெண்ணெயை விளக்கெரிக்க உபயோகிப்பதால் நமது செல்வத்தில் ஓர் பாரிய பங்கு அன்னிய தேசத்திற்கு விலையுயர்ந்த விளக்குகட்காகவும் சிம்னிகட்காகவும் திரிக்காகவும் போய்ச் சேருகின்றது.

இது நிற்க, சிறு போத்தல் விளக்குகளால் அநேக விபத்துக்கள் சம்பவித்திருக்கின்றன; இன்னும் சம்பவிக்கின்றன. இம் மண்ணெண்ணெய் விளக்குகளின் மேல் சிறுகுழந்தைகள் தவறி வீழ்ந்து விட்டால் அவர்கள் உடை முழுவதும் தீப்பற்றி உடம்பு மெரிந்து புண்ணாகிச் சடிதி மரண மடைகின்றனர். தீவிரத்தில் தீப்பிடிக்கக்கூடிய பொருட்களில் இம் மண்ணெண்ணெய் சிந்தியிருக்க அருகாமையில் தீ யிருக்குமாயின், உடனே தீப்பிடித்துப் பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் உண்டாகின்றது. இவ்விதமாக அநேக குடிசைகளும், பண்டசாலைகளும் வேலைத்தலங்களும், எரிந்துபோயின.



மேலும் மண்ணெண்ணெய் விளக்குகள் உபயோகிப்பவர் வீட்டிலுள்ள பொருட்களை உருவங் கெடுப்பது மல்லாமல் வீட்டிலுள்ளாருடைய சுவாசப் பையையும் கண்பார்வையையும் கெடுத்து விடுகின்றது. தற்காலம் பாடசாலை மாணவர்கள் போத்தல் விளக்குகளிலும் மற்றைய மண்ணெண்ணெய் விளக்குகளிலும் படித்து வருகின்றனர். இதனால் பிள்ளைகளுடைய முக வசீகரமும் கட்பார்வையும் சரீர சுகமுங் கெட்டுப்போகின்றதே யென்று கூறினால் அநேகம் பெற்றார் அவ்விதங் கூறுபவருக்குப் பைத்திய மென்பர். இது மட்டுமா? சமையல் செய்யும்போது கையிற் பிடித்த சிறு விளக்கு தவறிப் பதார்த்தத்துள் வீழ்ந்தால் அது உபயோகமற்ற தாகின்றது. அடுப்புள் மண்ணெண்ணெயை ஊற்றி யெரிக்கும் துர்வழக்கத்தைக் கைக்கொண்டு வருகின்றனர். இதனால் வீட்டுப்பெண்கள் சோம்பேறிகளாவது மல்லாமல் உணவும் ருசி கெட்டுப்போகின்றது. செல்வவந்தர் வீடுகளில் இவ்வண்ணமாக நாள்தோறும் அநேகம் போத்தல் மண்ணெண்ணெய் செலவாகின்றது. இப்படி அடுப்புள் ஊற்றும்போது அணிந்திருக்கும் ஆடையிலே சில துளிகள் வீழ்ந்து தீப்பிடித்தால் வருங் கதி யின்னதென்று விரித்துக் கூறவும் வேண்டுமோ? எண்ணரிய தீங்குகளை விளைக்கும் பரதேச மண்ணெய்யை உபயோகிப்பதால் நாம் வறுமைப் பிணியை வரவழைப்பது மல்லாமல் சோம்பேறிகளுமாகி, நாட்டு நெய்களை வெவ்வேறு விதைகளிலிருந்து பிழிந்து உபயோகிக்கும் புராதன வழக்கத்தை அடியோடு விட்டுவிட்டோம்.

இனி, நமது முன்னோர் உபயோகித்து வந்த எள்நெய், தேங்காய் நெய், இலுப்பை நெய், புன்னை நெய், கடலைநெய், வேப்பநெய், ஆமணக்கு நெய் முதலிய சுதேசி நெய்களை உபயோகிப்பது அகௌரவமென்றும் அதிகச் செலவென்று மெண்ணி மண்ணெயயை உபயோகித்து வருவதால் நாமடைந்த கௌரவமென்ன வெனில், இளமையிலே கட்பார்வை கெடப்பெற்று மூக்குக் கண்ணாடி போட்டுக் கொள்வதும் செல்வத்தையும் சுகத்தையும் நாளுக்கு நாள் இழந்து வருவதுமாம். மேற்குறித்த சுதேசி நெய்களை உபயோகிப்பதால் வீட்டிற்கு இலக்குமீகரமும் நாட்டிற்கு நன்மையும் வறுமையின்மையும் சனங்கட்கு ஆரோக்கியமு முண்டாம். எல்லா விதத்தாலும் நன்மை பயப்பதும் ஒரு விதத்தாலேனும் தீங்கு விளைக்காததுமான சுதேசி நெய்களை உபயோகிப்பது மகா உத்தமம். இந்நெய்கள் விளக் கெரிப்பதற்கு மாத்திர மல்லாமல் கறி சமைப்பதற்கும் அவுடதங்கள் செய்வதற்கும் உபயோகப் படுகின்றமையால் இவை மண்ணெய்யிலும் பார்க்க எத்தனை சிறந்தன வென்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். தேசாபிமான முள்ள ஒவ்வொருவரும் மண்ணெண்ணெய் விலையிலும் சுதேச நெய்களின் விலை குறைவதற்கு வேண்டிய முயற்சிகளைப் பொதுநலங் கருதிச் செய்து நமது வாயில் மண் போடும் மண்ணெய்யை நாட்டை விட்டோட்ட, எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

திரு. கு. விஜயரத்தினம்

## விதியை வெல்லும் மதி.
## ஒரு சிறு கதை.

காசிமா நகரத்தில் விசுவநாத சாஸ்திரி என்று ஒரு பிராமணன் இருந்தான். அவன் பாட்டனார் விசுவநாத தீக்ஷிதர் மஹா மேதாவி. தென்னாடெங்கும் தமது அருமையான கல்வியின் கீர்த்திப் பிரதாபத்தைப் பரவச் செய்து, பின்பு வட திசைக்குச் சென்று வாரணாசி வித்வ சிரோமணிகளிடம் "வேதாந்த கேசரி" என்ற புண்ணிய க்ஷேத்திரத்திலேயே தங்கலானார். அவர் புத்திரர் சாமிநாத சாஸ்திரியார் அவ்வளவு படித்தவரன்று; கொஞ்சம் புராண இதிகாச பாராயணத்துக்கு வேண்டிய மட்டுமே ஸம்ஸ்கிருதப் பயிற்சி யுடையவர். அவர் மகன் விசுவநாத சாஸ்திரிக்கோ, பாஷா ஞானமே கிடையாது; முன்னோர் பேரை வைத்துக்கொண்டு பிராமணார்த்தம் சாப்பிட்டும், கோதானம் வஸ்திரதானம் முதலிய தானங்கள் வாங்கியும் காலக்ஷேபம் செய்து வந்தார். சாமிநாதன், சங்கரன், சுப்பிரமணியன் என இவருக்கு மூன்று குமாரர்க ளிருந்தார்கள். இப்பிள்ளைகள் முழுச் சோம்பேறிகள்; தேர்ந்த சாப்பாட்டு ராமன்கள். தங்கள் கல்விக்குறையை ஒருவாறு உணர்ந்திருந்த அவர்கள் பிதா எத்துணை முயன்றும், அடித்தும், திட்டியும் அவர்கள் புத்தி படிப்பிற் சிறிதும் நுழையவில்லை. ஆகவே, இக்குடும்பத்திற் கல்விப்பயிற்சி கரும்பின் வளர்ச்சி போலவே யாயிற்று.

ஆப்திகம், ஏகோதிஷ்டம், சவண்டி முதலியன எத்தனை ஆயிரத்திலோ தின்று கொழுத்த விசுவநாத சாஸ்திரிக்கும் காலம் நெருங்கியது; இன்றோ நாளையோ என்று கணக்கிடலாயிற்று; அவர் மனைவி

அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக ஒரு தூணிற் சாய்ந்து நின்றாள்; பிள்ளைகள் மூவரும், "அப்பா! நீர் போகிறீரே; இனி நாங்கள் எப்படிப் பிழைப்போம்; யார் சம்பாதித்துப் போடுவார்கள்?" என்று அலறியழுதார்கள். விசுவநாத சாஸ்திரிக்கு வித்வத் சம்பத்து இல்லையே யொழிய, குறும்பும் குயுக்தியும் ஏராளமாயுண்டு. "குணம் கொன்றாற்போம" என்று பழமொழியுண்டே. அவர் குறும்பு அச்சமயத்திலும் வெளிப்பட்டது. அவ்வாறழுத தம் பிள்ளைகளை நோக்கி மேல் மூச்சும் கீழ் மூச்சும் தூத்த வெகு சிரமத்துடன் பின் வருமாறு சொன்னார். "எல்லாருக்கும் சுவாமியிருக்கிறார்; அவர் காப்பாற்றுவார். எனக்குக் கொஞ்சம் பசுக்களைத் தவிர வேறொரு சொத்துமில்லை. அந்தப் பசுக்களை உங்களுள் சண்டையிடாமல், நான் இப்பொழுது சொல்லுகிறபடி நீங்கள் பாகம் செய்து கொள்ளுங்கள். அடே சாமிநாத! நீ மூத்தவன், சீமந்த புத்திரன், உள்ளதில் பாதியை நீயெடுத்துக் கொள்; சங்கரன், உள்ளதில் கால்வாசியை வைத்துக் கொள்ளட்டும்; சுப்பிரமணியன், மொத்தத்தில் ஐந்திலொன்றை வைத்துக் கொள்ளட்டும். நீங்கள் மூவரும் ஐந்துமாதமும், நாலு மாதமும், மூன்று மாதமுமாக ஒவ்வொரு வருஷமும் அவள் அந்திய காலமட்டும் உங்கள் தாயாரைக் காப்பாற்றுங்கள்," என்றார். அப்பொழுது பக்கத்திலிருந்த எதிர் வீட்டு நாராயணையர் "என்ன காணும், இப்பொழுதும் புதிர்ப் போடுகிறீரே. எதாவது பசு மிஞ்சினாலோ?" என்று கேட்டார்.

அதற்கு, விசுவநாத சாஸ்திரி, "மிஞ்சினால் எல்லாருமாகக் கறிவைத்துத் தின்னட்டும்; பிழைக்கத் தெரியாவிட்டால், எல்லாவற்றையும் நீர் ஓட்டிக் கொண்டுபோய்விடும்" என்றார்.



அகஸ்மாத்தாய் அப்பொழுது பெரியதோர் தூரத்தல் வந்து, கால வரைப்படி அவர் பிராணனும் போய்விட்டது. அபரகிரியைகள் எல்லாம் முடிந்து சில நாட்களுக்குப் பின், மூன்று பிள்ளைகளும் பிதுர் வாக்கியப்படி சொத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்பினார்கள். மொத்தம் பத்தொன்பது பசுக்கள் இருந்தன, இன்ன செய்வதென்று தெரியவில்லை. $9\frac{1}{2}$-பசுவை எப்படி யெடுத்துக் கொள்வான்? அவ்வாறே மற்ற இருவரும் விழிக்கத் தொடங்கினார்கள். முதலில் விளையாட்டுப் பேச்சாகச் சொல்லிப், பின்பு எதிர் வீட்டு நாராயணையர் மெய்யாகவே, சாஸ்திரி மரணகால வாக்குப்படி, பசுக்கள் பத்தொன்பதும் தமக்கே யென்று வாதிக்கத் தொடங்கினார். பிள்ளைகள், "இதுவும் விதிதான்; தலையில் துணியைப் போட்டுக்கொண்டு எங்கேயாவது ஊட்டுப்புரை தேட வேண்டியது தான்," என்று சொல்லி மயங்கலானார்கள், ஒன்றும் தோன்றாமல் தங்கள் தந்தையை நொந்துகொண்டு, தாயிடம் முறையிட்டார்கள். நெடுநாட்பழக்கத்தால், பார்வதியம்மாளுக்கும் தன் புருஷனது குயுக்தி கொஞ்சமுண்டு. உள்ள சொற்ப ஆஸ்தியையும் எதிர் வீட்டாருக்குத் தன் கணவன் விட்டுப் போகமாட்டானென்பதும அவளுக்கு நன்றாய்த் தெரியும். சிறிது நேரம் யோசித்துப் பார்த்துப் பின்பு அவள், வீதியில் மேய்ந்து கொண்டிருந்த ஒரு பசுவையும் தொழுவத்துள் அடைத்துத் தங்கள் தகப்பனார் உத்தரவுப்படி பாகஞ் செய்துகொண்டு பின்பு அதை வெளியே ஓட்டி விடும்படி அவர்களுக்குச் சொன்னாள். அவர்களும் அவ்வாறே செய்து, நாம் விதி யென்று நினைப்பதில் அனேகத்தை மதியால் வெல்லலாம் என்னும் உண்மையைத் தெரிந்து கொண்டார்கள்.

"கௌசிகன்"

## வான சாஸ்திரக் குறிப்புகள்

(வே. நாராயணன் எழுதியது)

---

சென்ற பகுதியிலே மாதம், திதி, நக்ஷத்திரம் இவைகளைப் பற்றி எழுதினேன். இந்தப் பகுதியிலே நாள், மாதம், வருஷம் இவற்றைப் பற்றி எழுதுவேன்.

தினந்தோறும் காலையிலே சூரியன் கிழக்கே உதயமாகிறானல்லவா. அவ்வாறு உதயமாகும்போது எந்த நக்ஷத்திரக் குவியல் கீழ்வானத்தின் அடியிலே தோன்றுகிறது என்பதைக் கவனிப்போமானால் அது நாளடைவில் மாறுவது விளங்கும். சூரியோதய காலத்திலே கீழ் வானத்தின் அடியிலே இன்று ஆட்டுத்தலை போன்ற நக்ஷத்திரக் குவியல் தோன்றுகின்றது என்றால் இன்னும் ஒரு மாதம் கழிந்தபோது அந்தக் குவியல் முற்றிலும் மேலே உயர்ந்து அதற்கு அடுத்தாப்போலே மாட்டுத்தலை போன்ற வேறொரு குவியல் காணப்படும். இவ்வாறு மாதா மாதம் வெவ்வேறு நக்ஷத்திரக் குவியல் காணப்படும். பன்னிரண்டு மாதமான பின் மீண்டும் ஆதியிலே தோன்றிய ஆட்டுத்தலை போன்ற நக்ஷத்திரக் குவியல் தோன்றும். ஆகவே சூரியனுடைய கதியிலே அமைந்த நக்ஷத்திர மண்டலம் பன்னிரண்டு பகுதிகளாக வகுக்கப்படுகின்றது. இவ்வகுப்புகளுக்கு 'குவியல்' என்ற பொருள் கொண்ட 'இராசி' என்ற வடமொழிப் பெயர் வழங்கப்படுகின்றது. பன்னிரு ராசிகள் தங்களுடைய தோற்



றத்தாலே மேஷம், விருபஷம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்ற பெயர்களைப் பெற்றுள்ளன.

இவ்வாறு இன்று மேஷராசியிலே தோன்றிய சூரியன் அடுத்த மாதம் விருஷப ராசியிலே தோன்றுவதற்குக் காரணம் என்ன என்பதை நாம் ஊகித்து அறிவோம். பூமி வானத்திலே சலிக்கின்றது. அவ்வாறு அது சுழல்வதை இரண்டு விதமான சலனங்களாகப் பிரித்து அறிந்துகொள்ள முடியும். தன்னைத் தானே பம்பரம்போலே சுற்றிச் சுழல்வது ஒரு வகையான சலனம்; தான் சூரியனைச் சுற்றிவருவது வேறொரு வகையான சலனம்; இவ்விரண்டு சலனங்களாலே தோற்றும் மாறுபாடுகளைக் கவனிப்போம். தன்னைத் தானே சுற்றிச் சுழல்வதாலே பூமியிலே இருக்கின்ற நமக்கு, நாம் அசையாமல் இருப்பது போலவும் நமக்கு எதிரிலே வான மண்டலத்திலே அசையாமல் அமைந்துள்ள நக்ஷத்திரங்கள் எல்லாம் நம்மைச் சுற்றுவது போலவும் தோற்றுகின்றது. இன்று காலையிலே கீழ்வானத்திலே இருந்த நக்ஷத்திரமோ சூரியனோ நாளையதினம் மெல்ல எழுவது போலத் தோன்றுகின்றது. இவ்வாறு பூமி தன்னைத் தானே ஒரு தரம் சுற்றிக் கொள்ள சுமார் 24 மணி நேரம் ஆகின்றது. அவ்வாறு ஆகின்ற காலத்தை ஒரு அளவையாக்கி, அதை ஒரு 'நக்ஷத்திர நாள்' என்று சொல்வோம். அந்த நக்ஷத்திர நாள் சாதாரண நாளினும் சற்று சுருங்கிய பொழுதை உடையது. அதை 24 'நக்ஷத்திர மணி' களாகவும் ஒவ்வொரு நக்ஷத்திர

மணியையும் 60 "நக்ஷத்திர மினிட்டு" களாகவும் ஒவ்வொரு நக்ஷத்திர மினிட்டையும் 60 'நக்ஷத்திர செகண்டு' களாகவும் வகுத்துக் கொள்வர் வான சாஸ்திரிமார்.

பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்வதாலே நக்ஷத்திரங்களும் சூரியனும் ஆகாயத்திலே கிழக்கினின்றும் மேற்கு நோக்கிச் சலிப்பன போலத் தோன்றுவன வாயினும், அவற்றுள் நக்ஷத்திரங்களை விட சூரியன் சற்றுக் குறைந்த வேகத்துடனே போவது போலத் தோன்றுகின்றது. இதனாலே தான் சூரியன் இன்று எந்த நக்ஷத்திரத்தோடு உதயமாகின்றானோ அந்த நக்ஷத்திரத்தோடு அடுத்த மாதம் உதயமாவதில்லை. இவ்வாறு ஒரு குவியலைக்கடந்து மற்றொரு குவியலைச் சேர சூரியனுக்கு ஒரு மாதம் ஆகின்றது. ஆதலின், ஒரு நாளிலே சூரியன் சுமார் 1/30 பங்கு நக்ஷத்திரக் குவியலை கடந்து செல்கிறான். அதாவது சுமார் 1/360 பங்கு நக்ஷத்திர வளையத்தை ஒரு நாளிலே சுற்றி ஒரு வருஷத்திலே நக்ஷத்திர வளையத்தை ஒரு சுற்றுச் சுற்றி வருகிறான்.

இவ்வாறு சூரியன் நக்ஷத்திர வளையத்திலே ஒரு வருஷத்திற்கு ஒரு சுற்று சுற்றுவதாகத் தோன்றுவதற்குக் காரணம் பூமியின் இரண்டாவது வகையான சலனமேயாகும். பூமி சூரியனை ஒரு வருஷத்திலே ஒரு தடவை சுற்றி வருகின்றது; வரவே, பூமியின் மேலோட்டிலேயுள்ள மானிடருக்கு அந்த பூமி நிலைத்து இருப்பது போலவும், அதற்கு எதிரிலே சூரியன் அதைச் சுற்றி வருவது போலும், தன்னைத் தானே பூமி சுற்றி வருவதாலே தோன்ற வேண்டிய வேகத்திலும் அதிக வேகத்தோடு சுற்றுவது போலவும் தோன்றுகின்றது.



இனி, மேஷராசியின் துவக்கத்திலே சூரியன் இன்று தோன்றுவதாக வைத்துக்கொள்வோம். இன்று "மேஷ சங்கிரமணம்" ஆகும். அதாவது சூரியன் மேஷராசியிலே புகுந்தினம் ஆகும். இன்று முதற்கொண்டு புது வருஷமாக்கி இத்தினத்தை வருஷப் பிறப்புத் தினமாகக் கொண்டாடுவோம். சுமார் முப்பது நாள் கழிந்தபின் அடுத்த நக்ஷத்திரக் குவியலான விருஷபராசியிலே சூரியன் புகுவது போலத் தோன்றும். அன்று மேஷ மாதம் போய் விருஷப மாதம் பிறக்கும். இவ்வாறு சூரியன் பன்னிரு ராசிகளையும் கடக்கவே, மேஷம், விருஷபம் முதலிய பன்னிரு மாதங்கள் ஏற்படுகின்றன. இவை பௌர்ணமி, அமாவாசை முதலிய சந்திரனுடைய தோற்றங்களாலே ஏற்பட்ட சாந்திர மாதத்தினின்றும் சற்று வேறுபடுவன வாதலின் இவற்றை **'ஸௌர'** அல்லது **'சூரிய மாதம்'** என்று கொள்வோம்.

இவ்வாறு இராசிகளைக் கடந்து செல்கின்ற சூரியன் மீண்டும் மேஷராசியின் துவக்கத்திற்கு வர சுமார் 365¼ நாட்களாகின்றன. ஒரு நாள் என்பது சூரியோதயம் முதல் மற்றொரு சூரியோதயம் வரையிலுள்ள காலப் பகுதி. எனவே நாம 365¼ நாட்களை ஒரு வருஷமென்று கொள்கின்றோம். ஐரோப்பியர் ¼ நாட்

பொழுதைக் கூட்டாமல் இருந்து நான்கு வருஷங்களுக்கு ஒரு முறை வருஷத்தை 366 நாட்களாக ஆக்கிக் கொள்கின்றார்கள். இது ஒரு ஸௌகரியமான ஏற்பாடே யாகும். ஆயினும் துல்லியமாகக் கணக்கிட்டுப் பார்த்தால் $365\frac{1}{4}$ நாட்களைவிட ஒரு வருஷம் சற்றுக் குறைந்ததே யாகும். எனவே $365\frac{1}{4}$ நாட்களாகக் கணக்கிட்டால் நானூறு வருஷங்களிலே மூன்று நாள் அதிகம் கூட்டிய தாகும்; இதைச் சரியாக்கவே நூற்றாண்டுகளிலே நான்கில் மூன்றை 365 நாட்களேயே கொண்டதாகக் கணக்கிட்டுக் கொள்கிறோம். அதாவது 1700-ம் ஆண்டிற்கு 366 நாட்கள் இல்லை; 365 நாட்களே; அவ்வாறே 1800-ம், 1900-ம் 2000-ம் வருஷங்களும் 366 நாட்களை உடையதாகும். 366 நாட்கள் கொண்ட வருஷத்தை 'Leap Year' என்று ஐரோப்பியர் வழங்குவார்கள்.

ஒரு வருஷ காலத்திலே சூரியனை விட நக்ஷத்திர மண்டலம் ஒரு தடவை அதிகமாகச் சுற்றுவது போலத் தோன்றுமாதலால் $365\frac{1}{4}$ சாதாரண நாட்கள் $366\frac{1}{4}$ நக்ஷத்திர நாட்களுக்குச் சமமாகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

தமிழ்நாடு

# பாலவிநோதினி

## குழந்தைகளின் அன்பன்


| | | |
|---|---|---|
| வருட சந்தா தபாற் கூலி யுட்பட | இந்தியா, பர்மா, சிலோன் | ... ரூ. 1 8 0 |
| | பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு | ... ரூ. 2 0 0 |
| தனிச்சஞ்சிகை | ... ... | விலை ரூ. 0 2 0 |

1. பத்திரிகைக்கு ஜனவரி மீ முதல் டிசம்பர் மீ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கோள்வதானல் அணா மூன்று அதிகமாய்ச் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

### விளம்பர விகிதம்

| | |
|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | ...ரூபா 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு ,, | ... ரூபா 5—0—0 |

காண்டிராக்ட் ரேட்டானல் சகாயமுண்டு.

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

# அமிர்தாஞ்சனம்.

சர்வ நோய்களுக்கும்




வலித்த ஔஷதம்

விலை அணா 10 அணா 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங்செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்
சனமே. தலைவலி, முதுகுவலி, கீல்பிடிப்பு முத
லிய சகலநோய்களையும் நொடிப்பொழுதில் தீர்க்கும்.

## அமிர்தாஞ்சன் டிப்போ,

**7, தம்புச்செட்டி தெருவு, சென்னை.**


Vavilla Press ,Madras.